Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.68/2017

| | |
|---|---|
| | Prosecution PW5 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | நாகராஜன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு **317** ன் கீழ் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of **17.02.2023**

**முதல் விசாரணை**

நான் வெங்கமேட்டில் குடியிருந்து வருகிறேன். நான் பி.எஸ்.என்.எல்லில் வேலை பார்த்து ஓய்வு பெற்று விட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. (சாட்சி முதலில் சங்கப்பிள்ளை என கூறிவிட்டு மீண்டும் மாற்றி) என்னுடன் சாமியப்பன் என்பவர் கையெழுத்து செய்தார். சுமார் 4, 5

s/d. K. Ambiga

நாகராஜன் நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

வருடங்களுக்கு முன்னர் காலை சுமார் 11 மணியளவில் அ.சா.1  வீட்டின் முன்பு அ.சா.1ன் வீட்டில் நடைபெற்ற சம்பவம் குறித்து போலிசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். அதற்கு சாட்சியாக நான் சாட்சி கையெழுத்து செய்து கொடுத்தேன். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கிய தேதி எனக்கு தெரியாது. நான் சாட்சி கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்பது பற்றி எனக்கு தெரியும். என்னுடன் சாட்சி கையெழுத்து செய்தவர் எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். அ.சா.1 சந்திரசேகர் என் பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். நான் அவருடன்தான் தற்போது நீதிமன்றத்தில் சாட்சி அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றாலும் காவல் நியைத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றாலும் அ.சா.1 எனது பக்கத்துவீட்டுக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் உண்மையிலேயே சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்திருந்தால் தேதி நேரம் எல்லாம் ஞாபகமிருந்திருக்கும் என்றாலும் , காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்ததால்தான் எனக்கு தேதி நேரம் ஞாபகமில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்து 4, 5 வருடங்கள் ஆனதால் எனக்கு சரியாக ஞாபகமில்லை.  அ.சா.1 எனது நண்பர் என்பதால் அவருடன் நீதிமன்றத்திற்கு வந்து அவரும் போலிசாரும் சொல்லிக்கொடுத்ததன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
நாகராஜன்

s/d. K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.68/2017

| | | |
|---|---|---|
| | | Prosecution PW6 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | ராஜ சேகர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு **317** ன் கீழ் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of **17.02.2023**

**முதல் விசாரணை**

நான் சின்னான்டாங்கோயில் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் ஆதி ஸ்வீட்ஸ் மற்றும் பேக்கரி கடை வைத்துள்ளேன். சுமார் 8, 9 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் அ.சா.1 சந்திரசேகர் எனது கடைக்கு வந்து ஸ்வீட்ஸ் பாக்ஸ் பெட்டியை காண்பித்து உங்கள் கடையில் உள்ள கேமராவை இயக்கி எங்கள் வீட்டிற்கு வந்த அந்த

s/d. K. Ambiga

ராஜ சேகர் நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

நபர் அடையாளம் பார்ப்பதற்காக கேட்டுக்கொண்டதன் பேரில் கேமராவை இயக்கி காண்பித்தேன். அதில் இருந்த நபரைப் பார்த்துவிட்டு அவரது வீடியோ பதிவை கேட்டார். அப்போது அவரிடம் விசாரித்தபோது அந்த நபர் தன்னுடைய வீட்டிற்கு வந்து பழைய ரூபாய் நாணயங்களை என்னுடைய குழந்தைகளை ஏமாற்றி எடுத்துச்சென்று விட்டதாக கூறினார். அதன்பிறகு நான் வீடியோ பதிவை எடுத்து போலிசாரிடம் கொடுத்தேன். எதிரியைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். (எதிரி இன்று ஆஜர் இல்லை) போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ராஜ சேகர்

s/d. K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.